**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 213/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : ஷாம்குமார் |
| Father/Husband's Name | : ஜெயகுமார் |
| Village | : மாம்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.09.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னையிலுள்ள தனியார் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனியில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். 26.10.2020 ஆம் தேதி நானும் எனது மனைவி தீபா ஆகியோர் எனக்கு சொந்தமான TN 02 BJ 9717 என்ற போர்ட் ஆஸ்பைர் காரில் தாம்பரத்திலிருந்து சென்று கொண்டிருந்தபோது வண்டலூர் உயிரியல் பூங்கா அருகே சாலையின் இடப்பக்கமாக சென்று கொண்டிருந்தபோது எனது வண்டியின் பின்னால் வலது பக்கத்தில் டமால் என்ற சத்தம் கேட்டது. உடனே நான் வண்டியை நிறுத்திவிட்டு முறையாக கவனித்துவிட்டு கீழே இறங்கி பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபர் மேற்படி என் வண்டியின் பின்புறம் மோதி கீழே விழுந்தவரை டாடா டெம்போ வாகனம் அவர் மீது ஏறி விபத்து நடந்தது.

நான் பார்த்தபோது ஏற்கனவே மேற்படி வண்டி இருசக்கர வாகனத்தில் இருந்த நபர்மீது ஏறி இறங்கிவிட்டது. (தற்போது சாட்சி மேற்படி விபத்தை ஏற்படுததிய நபரை ஞாபகம் இல்லை என்று சொல்கிறார்). பிறகு, ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்தது. அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் வந்த நபரை சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். நான் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி **புகார் அ.த.சா. 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை. சத்தம் கேட்டபிறகு போய் பார்த்தேன்.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 213/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | : தீபா |
| Father/Husband's Name | : ஷாம்குமார் |
| Village | : மாம்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.09.2024.

**முதல் விசாரணை–**

நான் எம்.காம் வரை படித்து இருக்கிறேன். அ.சா.1 எனது கணவர். கடந்த 26.10.2020 ஆம் தேதி நானும் எனது கணவரும் எங்களுக்கு சொந்தமான போர்டு காரில் தாம்பரத்திலிருந்து மாம்பாக்கம் சென்று கொண்டிருந்தபோது வண்டலூர் அருகே காலை சுமார் 7.30 மணிக்கு எங்கள் காரின் பின்னால் இருசக்கர வாகனம் ஒன்று மோதிய சத்தம் கேட்டது. உடனே இறங்கி பார்த்தபோது மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எங்கள் காரின் மோதி கீழே விழுந்தவரை மற்றொரு வேன் மோதி அவர் மீது ஏறி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்து ஏற்படுத்திய வேன் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. பிறகு, ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்தது. விபத்து குறித்து எனது கணவர் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இருசக்கர வாகனம் ஓட்டிய நபர்தான் எங்களுடைய காரினை மோதினார். இருசக்கர வாகனத்தை மோதிய வேனின் பதிவெண் எனக்கு தெரியாது. விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 213/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-3 |
| Name | : மேரி |
| Father/Husband's Name | : ஆல்பர்ட் ஜீவானந்தம் |
| Village | : செம்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.09.2024.

**முதல் விசாரணை–**

நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்து போனவர் எனது கணவர். கடந்த 23.10.2020 ஆம் தேதி வழக்கம்போல எனது கணவர் அலுவலகம் சென்றுவிட்டு திருப்பி வரும்போது வண்டலூர் அருகே கார் மற்றும் வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு , நான் வீட்டிலிருந்தபோது போலீசார் போன் மூலமாக தகவல் சொன்னார்கள். நான் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துமனைக்கு சென்றபோது எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு கோமா நிலையில் இருந்தார். 29.10.2020 ஆம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்து போனார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.